# பிரதம செயலாளர் செயலகம், வடக்கு மாகாண சபை
# ප්‍රධාන ලේකම් කාර්යාලය, උතුරු පළාත්සභාව
# Chief Secretary's Secretariat, Northern Provincial Council

மாகாண சபை வளாகம், A9வீதி, கைதடி
පළාත්සභාවසංකීර්ණය,A9පාර, කයිතඩි
Provincial Council Complex , A9Road, Kaithady

Telephone : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
Website : www.np.gov.lk
e-mail : chiefsecnpc@gmail.com


எனது இல: NP/09/A&P/04/12/CIR/2026 திகதி : 21/01/2026

மாகாண நிதிச் சுற்றறிக்கை இலக்கம்: **PF/AP/1/2026**

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடமாகாணம்.

**தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் பிரிவு 13 இனை திருத்துதல் - விழா முற்பணங்கள்**

மேற்படி விடயம் தொடர்பில் 04/2026 இலக்க 13.01.2026 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைவாக PT/04/2015 இலக்க 30.03.2015 ஆம் திகதிய மாகாண சுற்றுநிருபம் பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

2. மேற்படி சுற்றுநிருபத்திற்கு அமைவாக தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 13.2ம் பிரிவிற்கமைய தற்போது வழங்கப்பட்டுவரும் விழா முற்பணமானது உத்தியோகத்தரின் விருப்பத்தின் பிரகாரம் ஏதேனுமொரு வருடாந்த விழாவுக்காக ரூபா 15,000/- ஆக வழங்க முடியும். 3.5 ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கடன் தொகையைக் கழித்துக் கொள்ளக்கூடிய எல்லைகள் இம் முற்பணத்திற்கு ஏற்புடையதாகாது. மேலும், இம் முற்பணமானது வட்டியற்றதாகும்.

3. மேற்படி திருத்தம் 2026.01.01 ஆந் திகதி முதல் அமுலாகும் என்பதுடன், இது தொடர்பான ஏனைய ஏற்பாடுகள் அனைத்தும் அதேபோன்று அமுலில் இருக்கும்.

4. மேலும், 01.01.2026 ஆந் திகதி முதல் இச்சுற்றறிக்கை வெளியிடப்படும் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் நிலவிய ஏற்பாடுகளின் பிரகாரம், விழா முற்பணத்தைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்களுக்காக அவ் ஏற்பாடுகளின் பிரகாரம் பெற்றுக்கொள்ளக்கூடிய விழா முற்பணத்தின் எஞ்சிய தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படலாம். அவ்வாறு வழங்கப்பட்ட பின்னர் தவணைக்கட்டணங்களை அறவிடுவது புதிய ஏற்பாடுகளின் பிரகாரம் திருத்தப்படல் வேண்டும்.

தனுஜா முருகேசன்
பிரதம செயலாளர்,
வடமாகாணம்,

தனுஜா முருகேசன்
பிரதம செயலாளர்
வட. மாகாணம்

பிரதிகள்-
1. கௌரவ ஆளுநரின் செயலாளர் - கௌரவ.ஆளுநர் அவர்களுக்கு தெரியப்படுத்துவதற்காக
2. சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் நாயகம், வ.மா - தகவலுக்காக
3. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், வ.மா - தகவலுக்காக